# குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களின் செய்தி வெளியீடு

தமிழக அரசின் உத்தரவின்படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் வெளியிடப்பட்ட உத்தரவின் படியும் குளித்தலை நகராட்சி பகுதிகளில் அக்டோபர் 29.10.2025 அன்று வார்டு எண் 1 முதல் 24 வார்டுகளுக்கு அப்பகுதி மன்ற உறுப்பினர்கள் தலைமையில் வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்கள் நடைபெற உள்ளதை தொடர்ந்து இக்கூட்டத்தில் பொது மக்களுக்கு அளிக்கப்பட்டு வரும் குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, தெரு விளக்கு பராமரிப்பு சாலைகள், பூங்கா, மழைநீர் வடிகால் பராமரிப்பு ஆகியவற்றில் நிலவும் சேவைக் குறைபாடுகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கலாம். மேலும் நகர்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பூங்காக்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கம் மூலம் பராமரிப்பு செய்வது குறித்தும் விவாதிக்கலாம். பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் செயல்பாடுகள் மற்றும் மேம்படுத்தும் முறைகள் பற்றியும் விவாதிக்கலாம் என்று உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாய்ப்பினை அந்தந்த வார்டுகளில் உள்ள பொது மக்கள் மேற்குறிப்பிட்டுள்ள நாளில் நடைபெற உள்ள வார்டு அளவிலான சிறப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இங்ஙனம்

ஆணையர்,

குளித்தலை நகராட்சி.



Scanned with OKEN Scanner